விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 கார்த்திகை 1 ஸபர் 11 இதழ் 276
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-11-83

## அமைச்சரவைக் கூட்டத்தில்
# பேச்சுவார்த்தை விபரங்களை ஜனதிபதி வெளியிட்டார்!

(கொழும்பு)
இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதியுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தை விபரங்களை நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வெளியிட்டார்.

புதிய யோசனைகள் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் காமன்வெல்த் நாட்டுத் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக டில்லி செல்லும்போது விவாதிக்கவுள்ளதாகவும் ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான யோசனை

(8ம் பக்கம் பார்க்க)

## நேற்று நிதி அமைச்சர் சமர்ப்பித்த 'பட்ஜட்'
# பாஸ்போர்ட்டுக்கு இனி ரூ. 200!
# சிகரட், தபால்கட்டணம் உயர்வு!

(இ. கந்தசாமி)

நிதி அமைச்சர் திரு. றெனி டி மெல் நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த 'பட்ஜட்' யோசனைகளில் சிகரெட் விலை இரண்டு சதத்தால் உயர்ந்துள்ளது. பாஸ்போர்ட் விண்ணப்பத்துக்கான கட்டணம் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. தபால், தந்தி, தொலைபேசி கட்டணங்கள் டிசம்பர் முதலாம் திகதி முதல் உயர்த்தப்படும். புனர்நிர்மாண நிதிக்கு அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களிடமிருந்து மாதச் சம்பளத்தில் ஒரு சத வீதமும், அவர்களது வருடாந்த வருமான வரியிலிருந்து பத்து சத வீத மேலதிக கட்டணமும் அறவிடப்படும்.

### ஆச்சரியமான 'பட்ஜட்!'

சாதாரண மக்கள்மீது பெரும் சுமையை ஏற்றப் போகிறேன் என்றும், இலவசக் கல்வியிலும், இலவச வைத்தியத்திலும் கூடக் கைவைக்கப் போகிறேன் என்றும் பலவிதமாக இந்த பட்ஜட் பற்றி எண்ணிக்கொண்டிருக்கிற நேரத்தில், எல்லாரையும் ஆச்சரியத்தில் அமிழ்த்தப்போகிறேன் என்று பீடிகை போட்டபடியே, தனது 'பட்ஜட்' யோசனையைச் சமர்ப்பித்தார் பாராளுமன்றத்தில் அமைச்சர் றெனி டிமெல்.

அவர் தனது வரவுத்திட்ட உரையில் தெரிவித்த யோசனைகள் வருமாறு:

சாராயம் ஒரு போத்தலுக்கு 3 ரூபாவினல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(இது 11-11-83 இல் அறிவிக்கப்பட்டது)

உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகையிலான மதுபானங்களுக்கு ஒரு போத்தலுக்கு ரூபா 16.50 ரூபா விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

### புத்தகம் சஞ்சிகை இறக்குமதிக்கு சுங்கத்தீர்வை இனி இல்லை!

புத்தகங்கள், மதாந்த வாராந்த சஞ்சிகைகள் ஆகியவற்றுக்கு இறக்குமதித் தீர்வையில் இருந்து விலக்களிக்கப்படும்.

வருமானவரி விலக்கு பன்னிரண்டாயிரம் ரூபாவிலிருந்து பதினெட்டாயிரம் ரூபாவுக்கு அதிகரிம்பு,

(8-ம் பக்கம் பார்க்க)

## சபையில் திடீர் பரபரப்பு
# நிதிஅமைச்சர் றெனி தாமதித்து வந்தார்!

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஏழாவது பட்ஜட்டுக்காக பாராளுமன்றம்நேற்று பிற்பகல் இரண்டு மணிக்கு கூடியது. நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. றெனி டிமெல் 9 நிமிடம் தாமதித்து சபைக்கு வந்தார்.

சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்கா தலைமையில் கூடிய பாராளுமன்றத்தின் வழமையான நடவடிக்கைகள் 2 மணி 7 நிமிடத்தில் முடிவடைந்தன. அப்போதும் நிதி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒரே பார்வையில்
# 'பட்ஜட்'

- ★ சிகரட் விலை 2 சதத்தால் அதிகரிப்பு
- ★ பாஸ்போர்ட் விண்ணப்பத்திற்கான கட்டணம் 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவுக்கு அதிகரிப்பு
- ★ தபால் கட்டணங்கள் டிசம்பர் முதல் அதிகரிப்பு; தொலை தொடர்பு தந்திக்கட்டணமும் இத்திகதியிலிருந்து அதிகரிப்பு.
- ★ புத்தகங்கள், மாத, வார சஞ்சிகைகள் இறக்குமதி தீர்வை இனி இல்லை.
- ★ ஜூலைக் கலவர பாதிப்பு புனர்வாழ்வு வரி ஓராண்டுக்கு அரச தனியார் ஊழியரிடமிருந்து சம்பளத்தில் 1 சத வீதம், ஓராண்டு வருமான வரியில் 10 சத வீதம் மேலதிக கட்டணம்.
- ★ 12 ஆயிரம் ரூபாவிலிருந்து இனி 18 ஆயிரம் ரூபாவுக்கு வருமானவரி விலக்கு.

## "ஜூலை கலவரங்களைப் போன்று
# இப்படி ஒரு சம்பவம் இங்கு நடக்கக்கூடாது!"
## —நிதி அமைச்சர்

(கொழும்பு)
"இந்த அரசின் சாதனைகளைக் கடந்த ஜூலை மாதக் கலவரங்கள் பாதித்துவிட்டன. அந்நிய நாடொன்றின் படையெடுப்பினால் சிதைவுற்ற நாட்டினை விட மிக மோசமான நிலையில் இன்று இலங்கை இருக்கிறது."

இவ்வாறு நேற்று தமது 'பட்ஜட்' உரையின் போது நிதி திட்டமிடல்அமைச்சர் திரு றெனி டி மெல் குறிப்பிட்டார்.

திரு. மெல் தமது உரையில் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:-

"இந்நாட்டில் இத்தகைய ஒரு சம்பவம் இனி இடம்பெறுமல் இருப்பதற்கு நாம் திடசங்கற்பம் பூணவேண்டும்.

உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் அரசாங்கம் நம்பிக்கையை மீட்டெடுப்பது அவசியமாகிறது. பிரச்னைகளுக்கு வன்செயல் மூலமோ இரத்தக்களரி மூலமோ தீர்வுகாணமுடியாது. பேச்சுவார்த்தை மூலமும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மூலமும்தான் இப்பிரச்னைகளை முறையாகத் தீர்க்க முடியும்.

இனப்பிரச்னைகளை நாம் உடனடியாகத் தீர்ப்போம். அது எமது நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களினல் பொறிக்கப்படும்.

"இந்த ஆண்டு இறுதியில் நிதிப்பற்றுக்குறை ஏற்படமாட்டாதென எண்ணியிருந்தோம். ஆனல் ஜூலை மாதக் கலவரங்கள் காரணமாக எமது

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

## நம்பிக்கையில்லா தீர்மானம்தோல்வி

(சென்னை)
எம். ஜி. ஆர். தலைமையிலான தமிழ்நாடு அண்ணு திராவிட முன்னேற்றக்கழக அமைச்சரவை மீது தமிழக சட்டப் பேரவையில்கொண்வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது.

## சைபிரஸில் துருக்கியர் தனிநாட்டுப் பிரகடனத்துக்கு இலங்கை கண்டனம்!

(கொழும்பு)
சைபிரஸின் வடபகுதியை துருக்கியர்களின் தனிநாடாக துருக்கியர்கள் பிரகடனப்படுத்தியதை இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ், ஹமீத் இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில் துருக்கியர்களின் இச் செயல் சர்வதேச சட்டத்துக்கு முரணனது. இதனை எந்த நாடும் அங்கிகரிக்க முடியாது என்றும், சைபிரஸ் பொதுநலவாய நாடுகள் அமைப்பிலும் அணிசேரா நாடுகளிலும் நெடுங்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உடன் விற்பனைக்கு Electric Shaver, Polaraid Camera, பாவனையில் உள்ள Nichchi எலெக்றிக் தையல் மெசின். தொடர்பு: இந்திரமோகன், வேலெக்கை றேட், மானிப்பாய். 9934

நஷனல்(National) 14'' கலர் T. V. TC-492 SPM மொடல் மின் கட்டுப்பாட்டு கருவியோடிணைந்தது. புதிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: மனோகரன் ஸ்டார் எலெக்ரோனிக்ஸ், 37/6 ஸ்ரான்லிறேட், யாழப்பாணம். (லிடோ சினிமா அருகில்) 9935

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சங்கத்தானையில் பாடசாலை, வைத்தியசாலை, சந்தை, தபாற்கந்தோர், புகையிரத நிலையம் சமீபமாகஉள்ள வீடு கட்டுவதற்கு உகந்த மின் சார வசதியுள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ச. கந்தசாமி, உபதபால் நிலையம், சங்கத்தானை எனும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 9938

சங்கானை கிழக்கு தொட்டிலடியில், யாழ்ப்பாண றேட்டிலிருந்து 200 யார் தூரத்தில் 9 பரப்பு காணி விறபனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கோ தோட்டம் செய்வதற்கோ உகந்த நிலம். விபரங்களுக்கு: தில்லையம்பலம், யாழ். வீரசிங்க மண்டபம். 9945

இராஜ வீதியில் கரந்தன் சந்திக்கு அருகாமையில் 300 யார் தூரத்தில் வீடு கட்ட உகந்த 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிதம்பரப்பிள்ளை நடராசா, குறுக்கு றேட், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 9897

புனரமைக்கப்பட்ட ISUZU மினி பஸ்களும், டிரக்குகளும் (Trucks) விற்பனைக்குண்டு. ELF 250 (தனிச்சக்கரம்/இரண்டு சக்கரம்)' ELF 350 (KS 21 / 31 - அரை பொடி), ELF 150 / 250-15 ஆசன மினி பஸ்கள் (Low and High Roof Buses) வாங்க விரும்புவோருக்கு பினன்ஸ் வசதி செய்து தரப்படும். Inter Truck Company, 37, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. 9884

## பயிற்சி

அரச அங்கீகாரத்துடன், சர்வதேச முக்கியத்துவம்வாய்ந்த சான்றிதழுக்குரிய ஒரு மாதகால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J, E. C. 33, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். 9954

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி. யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9782

## கல்வி

ரேடியோ, T. V. தொழில் நுட்ப வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் அரச அங்கீகாரத்துடன், சர்வதேச முக்கியத்துவம்பெற்ற சான்றிதழைப் பெறுவதோடு இரண்டு அலைவரிசைகளைக் கொண்ட ஒரு வானொலிப் பெட்டிக்கும் சொந்தக்காரராகுங்கள். விபரங்கட்கு: J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 9953

## தேவை

அப்பியாசக்கொப்பி கட்டத் தெரிந்தவர்கள் தேவை. அருகாமையில் இருப்போர் விரும்பத்தக்கது. S. சிசுபாலன், 137, மவுண்காார்மேல் வீதி, யாழ்ப்பாணம். 9950

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/- ரூபாவுக்கு மேற்பட்ட பல விலைகளில் கோழிகளை நேரடியாக வந்துகொள் முதல்செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone 23131. (9952)

இளம் (B Com) பட்டதாரி கணக்கியல் கணக்காய்வுத் துறையில் 5 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் உடையவர். கணக்கியல் நூல்களைப் பூரணமாக எழுதவும், கணக்காய்வு வேலைகளை திறமையுடன் கையாளவும் கூடியவர் பொருத்தமான தொழிலை விரும்புகின்றார். விளம்பர இல. 9944, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9944

எலக்றிக் வெல்டிங், காஸ் வெல்டிங், கம்மாலை வேலைகளில் மூன்றிலும் முன் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும் தங்குமிட வசதியும் செய்து தரப்படும். 25-11-83ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். முகவரி: து. சத்திவேல், வல்வை மெற்ரல் இண்டஸ்ரீஸ், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை. 9936

வர்த்தக நிறுவனமொன்றிற்கு எஸ் லோன் பைப்பில் பிற்றிங்ஸ் (Bend, Socket) மற்றும் பொருட்கள் தொகையாக செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த தொழிலாளர் உடன் தேவை. கூடியசம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 9937, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9937

கோபிகிருஷ்ண கற்பூரத் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். 18-11-83-க்கு முன்னர் நேரில் தொடர்பு கொள்க. குபேரன் இண்டஸ்ரீஸ், 89, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9899

பிரபல்யமான கற்பூரத் தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை தொடர்பு: 132, ஆடியபாதம் றேட், கொக்குவில் மேற்கு, கொக்குவில் (சந்தைக்கு முன்பாக) 9901

சிலிண்டர் மெசினில் வேலை செய்யக்கூடியவர் உடன் தேவை. நேரில் வரவும். ஆர். எஸ். அச்சகம், யாழ்ப்பாணம். 9923

மணமகள் தேவை. உயர்குல இந்துமத, மத்திய கிழக்கில் வேலைசெய்யும், தீயபழக்கங்கள் இல்லாத, நற்குணமும் பண்பும், பொறுப்புகள் அற்றவருமான 36 வயதுடைய பொறியியல் பகுதியில் (Technician) வேலைசெய்பவருக்கு அதேகுலத்தைச் சேர்ந்த நிறமான, 28-33 வயதிற்குட்பட்ட, நற்குணமும், பண்பும் உள்ள மணமகள் தேவை. 8:ல் சனியும், சந்திரனுக்கு 7 செவ்வாயும் உண்டு. முழு சாதக விபரத்துடன், கொடுபடும் சீதனம், குடும்ப வரலாற்றுடன் எழுதவும். விளம்பர இல. 9845 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9845

## தவறிவிட்டது

13-11-83 அன்று கட்டுவன்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மோட்டர் சைக்கிள் பதிவுப் புத்தகம் (9 ஸ்ரீ 7090) தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஒப்படைக்கவும். C. J. M. குலநாதன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி சன்மானம் வழங்கப்படும். 9940

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வி ஏ. நோமலதா

காரைநகர் கருங்காலியை (பார்வதி பவனத்தைச்) சேர்ந்த ஏரம்பு சிவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி நோமலதா இன்று (17-11-83) தனது முதலாவது பிறந்ததினத்தை குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், மாமிமார், மாமாமார், சித்திமார் மற்றும் உறவினர்கள் சகல கலைகளும் பெற்று வாழ வாழ்த்துகின்றனர். 9939

## சந்தேகநபரின் பிணை ரத்து!

(யாழ்ப்பாணம்)

பிணைநிபந்தனையை மீறியதால், வழக்கொன்றில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட சந்தேகநபரின் பிணைரத்து செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்ற வழக்கொன்றில் சந்தேகநபரான றேமண்ட் என்பவர் யாழ். மேல் நீதிமன்றத்தால் நிபந்தனையின் பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் சாட்சி ஒருவரைக் குத்தியதோடு நிபந்தனைப்படி பொலிஸ் நிலையத்தில் சென்று கையெழுத்திடவில்லை என்று, யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் 'ஆஜர்செய்யப்பட்டார்.

நீதிபதி சந்தேகநபரின் பிணையை ரத்துசெய்து ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். (க)

## மரக்கடனுகை ரூ. 2,40,000!

(மட்டுவில்)

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கம்இந்த ஆண்டு சீவல் தொழிலாளர்களுக்கு மரக்கடனுகை 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவைக்கடனுகை வழங்கியுள்ளது என்று சங்கத் தலைவர் திரு. எம். கிருஷ்ணன் தெரிவித்தார்.

## Space Available For Tutory

At clock tower road wanted Organisers on Partnership basis contact

C. THURAIRATNAM, 8, Clock Tower Road, Jaffna. 9943

## பெண் நெசவாளர் தேவை

மின்தறியில் அல்லது கைத்தறியில் அனுபவம் உள்ளவர்களும், மின்தறியில் பயிற்சி பெற்று நெசவாளர்களாக வேலைசெய்ய விரும்புபவர்களும் 26-11-1983ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

சீமா சில்க் இண்டஸ்றீஸ் லிமிட்,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
போன்: 23170 9924

யா/உரும்பராய் இந்துக்கல்லூரி

## 6-ந்தரப் பிரவேசம், 84

விண்ணப்பங்கள் 23-11-83 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
பிரவேசப்பரீட்சை 3-12-83 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

அதிபர்.
83-11-14. (9946)

## மாடுகள் விற்பனை

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபைக்குச் சொந்தமான பளையில் உள்ள தர்மக்கேணித் தோட்டத்தில் 21 கட்டாக்காலி மாடுகள் (கன்றுகள் உட்பட) விற்பனைக்கு உண்டு.
கேள்வி விலைகள் 26-11-83 வரை தர்மக்கேணித் தோட்ட முகாமையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.
மாடுகளை பிடித்து அப்புறப்படுத்துதல் விண்ணப்பகாரரின் பொறுப்பாகும்.

முகாமையாளர்,
தர்மக்கேணி தோட்டம்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,
பளை. (9949)

கடற்றொழில் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்

## குத்தகைக்கு

## 3 1/2 தொன் மீன்பிடிவள்ளங்கள்


கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இரண்டு 3½ தொன் மீன்பிடி வள்ளங்கள் மாதக்குத்தகைக்கு இழுவை/படுப்பு சாதனங்களுடன் கொடுக்கப்படவுள்ளன. விரும்புவோர் மீளப்பெறமுடியாத பணமாக ரூபாய் 25/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் இருவள்ளத்திற்கும் தனித் தனியாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் 28 - 11 -83 அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி;

நிறைவேற்று முகாமையாளர்,
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம். 9930

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## சின்னத்தம்பி முருகேசு

(இளைப்பாறிய தபால் நிலைய அதிபர்)



தோற்றம்: பிங்கள வருஷம் வைகாசி மாதம் உ௭

மறைவு: துர்மதி வருஷம் கார்த்திகை உ௨ உ துவாதசி திதி.

நீர் இல்லாத எம் வாழ்வு நீரற்ற மரமாகியது. உயிருள்ளவரை உம் நினைவலைகளெல்லாம் எம் உள்ளத்தில் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும்

உற்றார்—உறவினர்.

உடுவில் தென் கிழக்கு, சுன்னாகம்.
ருதிரோற்காரி கார்த்திகை - க. (9787)

# சைப்பிரஸ் வடபகுதி தனிநாடாகப் பிரகடனம்!!

## சைப். அதிபர், இந்திரா ஆட்சேபம்

நிக்கோஸியா, நவ. 16

சைப்பிரஸின் வட பகுதியை ஆக்கிரமித்துள்ள துருக்கியர்கள் அப்பகுதியை சைப்பிரஸ் வாழ் துருக்கியர்களின் தனிநாடு என்று நேற்றுப் பிரகடனப்படுத்தினர். சைப்பிரஸில் உள்ள துருக்கியர்களின் நிர்வாக பீடமொன்றே இப்பிரகடனத்தை வெளியிட்டது. இந்த நிர்வாகபீடம் துருக்கியர்களின் சைப்பிரஸ் பாராளுமன்றம் என்று அழைக்கப்படுகிறது.

இப்பிரகடனம் வெளியிடப்பட்டது குறித்து சைப்பிரஸ் தலைவர் திரு. கிப்றியானோ கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார். ''இப்பிரகடனம் ஒருபோதும் அங்கீகரிக்கப்படமுடியாதது. சைப்பிரஸை எக்காரணம் கொண்டும் எச்சக்தியாலும் பிரிக்கமுடியாது'' என்று திரு. கிப்றியானோ அறிவித்தார்.

சைப்பிரஸ்தீவின் வடபகுதி துருக்கிநாட்டுக்குத் தெற்கே அமைந்துள்ளது இப்பகுதியைத் துருக்கியர்கள் கடந்த சில வருடங்களாக ஆக்கிரமித்துத் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளனர். இதனால் சைப்பிரஸ் அரசுக்கும் துருக்கிய ஆக்கிரமிப்பாளருக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நிகழ்வதுண்டு.

### இந்திரா எதிர்ப்பு

சைப்பிரஸின் வடபகுதி ஒரு தனி நாடு என்று துருக்கிய ஆக்கிரமிப்பாளர்கள் பிரகடனப்படுத்தியுள்ளதை இந்தியப் பிரதமரும், அணிசேரா இயக்கத் தலைவியுமான திருமதி இந்திரா காந்தி கடுமையாக எதிர்த்துள்ளார்.

''சைப்பிரஸ்தீவின் ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டும். அதன் சுதந்திரம், ஆட்சியுரிமை ஆகியனவும் பாதுகாக்கப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் சைப்பிரஸ் பிரிக்கப்படுவதை இந்தியாவோ அல்லது அணிசேரா இயக்கமோ ஆதரிக்காது. எனவே, துருக்கிய ஆக்கிரமிப்பாளர்கள் தமது பிரகடனத்தை ரத்துச் செய்யவேண்டும்'' என்று திருமதி இந்திரா காந்தி கூறினார்.

அவர் மேலும், ''சைப்பிரஸ் பிரிக்கப்படுவதைத் தவிர்க்க இங்குள்ள துருக்கிய, சைப்பிரஸ் சமூகங்களிடையே தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும்'' என்று கூறியுள்ளார்.

கிரேக்க பிரதமரும், சைப்பிரஸில் துருக்கிய ஆக்கிரமிப்பாளரின் நடவடிக்கைகளைப் பலமாகக் கண்டித்துள்ளார்.

[கி]

## ஓய்வூதியத்தைப் பெற முயற்சி எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபரைக்கோரப் போவதாக, திருநெல்வேலி ஓய்வூதியம் பெறுவோர் சங்க உறுப்பினர் திரு. த. தெட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

அடுத்த ஞாயிறு சங்கக் கூட்டம், திருநெல்வேலியில் நடைபெறவிருப்பதாகவும், அக் கூட்டத்தில் நூறுபேர்வரை உறுப்பினராக இருப்பதாகவும், இன்று பென்சன் கிடைக்காததினால் அநேகர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சங்கத்தலைவர் திரு. மாணிக்கம் மூலம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார். (க)

## பனைவள பயிற்சித் திட்டம்: சபை நடவடிக்கை

(புலோலி)

பனைவள உற்பத்தி, தொழில் துறைகளில் ஆர்வம் உள்ளவர்வர்களுக்குப் பனைவள அபிவிருத்தித்திட்ட நடவடிக்கைகளில் பயிற்சியளித்து நிபுணத்துவ உதவிகளைவழங்க இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்திசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

வடபகுதியில் உள்ள தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி சபை, ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், பனைவளத்தொழில்துறைகளில் ஆர்வம் உள்ளவர்கள் ஆகியோர் இப்பயிற்சிகளை மேற்கொள்ளலாம். மூன்றுமாதகால விசேட தொழில்நுட்பப் பயிற்சிகள் இப்பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சிகளின் போது இந்திய பனைவளத் தொழில்நிபுணரும், காமன்வெல்த் விசேட ஆலோசகருமான திரு. கே. சம்பந்தம் பயிற்சிகளை அளிப்பாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அகதிகள் பிரச்னை; மூன்று வாரத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள நலன்புரி நிலையங்களில் (அகதிகள் முகாம்) உள்ள மலையகத் தமிழர்கள் பற்றிய கொள்கைத் தீர்மானம் இன்னும் இரண்டு அல்லது மூன்று கிழமைக்குள் எடுக்கப்படும்.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் மேற்கண்டதகவலைத் தம்மிடம் தெரிவித்ததாக உலக இந்து மகாசபைத் தலைவர் திரு யோகேந்திரா துரைசுவாமி நேற்றுத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்திப்பதற்காக சென்றிருந்த திரு யோகேந்திரா துரைசாமி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பினார்.

அத்தியாவசிய சேவைகள் நாயகத்தை சந்தித்து பேசியதாகவும், அகதிகள் பிரச்னைகள் சுமுகமாக தீர்த்துவைக்கப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

அகதிகள் தொடர்பான சில கோரிக்கைகள், சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவை பற்றி இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள் முடிவுதெரியும் என்றும் அவர் கூறினார். (க)

## கம்பனுக்கு கலைக் கோயில்

(சென்னை)

கவிச்சக்கரவர்த்தி கம்பன் நினைவாக கலைக்கோயில் ஒன்று அவர் பிறந்த ஊரில் அமைக்கப்படவுள்ளது.

இத்தகவலை தஞ்சாவூர் ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

## அன்னைதிரேசா இலங்கை வருகிறார்

(கொழும்பு)

கொழும்பு நகரில் சில காலம் பணியாற்றுவதற்காக அன்னை திரேசா இலங்கை வரவிருக்கின்றார்.

கொழும்பு ஆர்ச்பிஷப் நிக்கலஸ் மார்கஸ் பெர்ணண்டோவின் அழைப்பின்மீது இங்கு வரும் அன்னை திரேசா கொழும்பில் துன்பமுறும் மக்கள் மத்தியில் தங்கியிருந்து தமது பணிகளை மேற்கொள்வார்

## பாலஸ்தீன விடுதலை இயக்க ஒற்றுமைக்காக மகாநாடு!

### இந்திரா கூட்டுகின்றார்!

புதுடில்லி, நவ. 16

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தவரிடையே தோன்றியுள்ள பிளவை நீக்க இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விசேட மகாநாடொன்றைக் கூட்டவுள்ளார். இம் மகாநாடு இவ்வார இறுதியில் புதுடில்லியில் இரு தினங்கள் இடம்பெறும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையைத் தீர்ப்பது குறித்து நடத்தப்படவுள்ள இம் மகாநாட்டில் அணிசேரா இயக்க முக்கிய நாடுகள் சிலவற்றின் வெளிநாட்டமைச்சர்கள் பங்குபற்றுவர். செனகல், ஸாம்பியா, பங்களாதேஷ், யூகோஸ்லாவியா, கியூபா. இந்தியா என்பன இந்நாடுகளில் அடங்குகின்றன.

இம்மகாநாட்டுக்குப் பூரண ஒத்துழைப்புத் தரும்படி சிரியத் தலைவர் திரு. அஸாத்தையும் திருமதி காந்தி கடிதமூலம் கேட்டுள்ளார். பாலஸ்தீன இயக்கத் தலைவர் அரபாத்துக்கும் இம்மகாநாடுபற்றி திருமதி காந்தி அறிவித்துள்ளார்

## லீவு கட்டுப்பாடு நீக்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

லீவு பெறுவதில் சுகாதரத் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த ஜுலை மாதம் 27ம் திகதி தொடக்கம் இருந்து வந்த கட்டுப்பாடு தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார்..

கடந்த ஜுலை மாதம் 27-ம் திகதி சுகாதாரத் திணைக்கள சகல தரத்து ஊழியர்களும் லீவு பெறுவது சம்பந்தமாக தம்மால் விடுக்கப்பட்ட சுற்று நிருபம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார நிறுவனத் தலைவர்கள் தமது ஊழியர்களுக்கு வழமைபோல லீவுகளை வழங்கலாம் என்றும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது

## பிரிட்டனின் அன்பளிப்பு

(கொழும்பு)

பிரிட்டிஷ் தூதர் ஸேர் ஜோன் நிக்கலஸ் ரூபா 236,000 மதிப்புள்ள உபகரணங்களை மகளிர் விவகார, போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்காவிடம் அன்பளிப்பு செய்துள்ளார்

ஒலிச்செறிவு மானி (ஓடியோமீட்டர்) ஒன்று, தன்னியக்க ஒலியியல் தடங்கல்மானி ஒன்று (ஓட்டோமட்டிக் அகவுஸ்டிக் இம்பெடன்ஸ் மீட்டர்) ஒன்று அளவுகோடு திருத்தல் கருவிகள் (கலப்ரேஷன் கிட்) ஆகியன அடங்கிய இந்த உபகரணங்களை வைத்திய பட்டப் பின்படிப்பு தாபனம் பயன்படுத்தும். தன்னியக்க ஒலியியல் தடங்கல் மானி நாட்டில் முதன்முறையாகப் பயன்படுத்தப்படவுள்ளது. தாபனத்தின் நீண்டகாலத் தேவை ஒன்றினை இவ்வுபகரணங்கள் நிறைவேற்றுகின்றன. ஷெபீல்டில் உள்ள பீட்டர்ஸ் ஓடியோமெட்ரிக் அன்ட் அகவுஸ்டிக் எகுயிப்மென்ட் என்ற நிறுவனம் இவற்றை வழங்கியுள்ளது.

## சென்னை மேல்நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு!

சென்னை, நவ. 16

''சென்னையிலுள்ள உடல் பிடித்துவிடும் நிலையங்களையும் ஏனைய உடல் அலங்கார நிலையங்களையும் அச்சுறுத்தக்கூடாது'' என்று சென்னை மேல் நீதிமன்றம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளது.

சென்னையிலுள்ள உடல் பிடித்துவிடும் மற்றும் அலங்கார நிலையங்கள் சிலஅண்மையில் சென்னை மேல்நீதிமன்றத்தில் ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்தன. அதில், பொலிசார் அடிக்கடி இந் நிலையங்களில் புகுந்து இவற்றில் தொழில்புரிவோரை மிரட்டுவதாகவும், இதனால் இவற்றில் உள்ளவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது;

இந்த மனுவை ஆராய்ந்த பின்னரே சென்னை மேல் நீதிமன்ற நீதிபதி திரு ரி. சத்தியதேவ் பொலிசாரை எச்சரித்து இந்நிலையங்களை அச்சுறுத்தக் கூடாதெனை உத்தரவிட்டார்.

அவர் மேலும், இந்நிலையங்கள் சட்டபூர்வமாக நிறுவப்பட்டவையென்றும், அவை சட்ட விரோத நடவடிக்கைகளில் இறங்கவில்லையென்றும் தெரிவித்தார்.

சென்னையில் சுமார் 50 உடல் பிடித்துவிடும் நிலையங்களும், அலங்கார நிலையங்களும் இருக்கின்றன. இவற்றில் பல வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற சென்னை நகரப் பெண்களால் நடத்தப்படுகின்றன.

[கி]

## ஜனாதிபதி நிதியிலிருந்து முகத்துவாரம் காளி கோவில் புனரமைப்பு!

(யாழ்ப்பாணம்)

கலவரத்தின்போது சேதமடைந்த முகத்துவாரத்தில் உள்ள காளி கோவில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உலக இந்து மகா சபைத் தலைவர் திரு. யோகேந்திரா துரைச்சுவாமி தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியிலிருந்து இதற்கும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், 'றேபியா'வும் இப்புனரமைப்பு வேலையில் தொடர்புவைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சேதமடைந்த இந்துக் கோவில்கள்பற்றியவிபரங்களை இந்து விவகார அமைச்சுக்கும், 'றேபியா' தலைவர் அட்மிரல் பெரேராவுக்கும் அனுப்பி வைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

சேதமடைந்த இன்னும் சில இந்துக் கோவில்கள் பற்றிய விபரம் கிடைக்கவில்லையென்றும், இக்கோவில்கள் பற்றிய விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார் (க)

## நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல்நிலையத்திற்கு. முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா ஞாபகார்த்தமாக அவர் சேகரித்துவைத்த புத்தகங்கள் வழங்கப்படவிருக்கிறது.

அமரர் தியாகராசா, சேர்த்துவைத்த நூல்களை அவர் நினைவாக வழங்கவிருப்பதாக அவரின் குடும்பத்தினர் யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் தெரிவித்துள்ளனர். (க)

## மணிவாக்கு

ஆறுகள் தங்கள் நீரைப் பருகுவதில்லை, மரங்கள் தங்கள் பழங்களைத் தின்பதில்லை. பயிர்களை வளர்க்கும் மேகங்கள் தானியங்களை உண்பதில்லை. பெரியவர்கள் தம் பொருளை பிறருக்கே பயன்படுத்துவார்கள்.

— அமரநீதி

## நமது நோக்கு

# பெண்குலத்துக்கு பேரிழிவு

காலப் போக்குடன் வாழ்க்கை முறைகள் மாறுபடுவது இயற்கை. ஒரு காலத்தில் குற்றமாகக்கருதக்கூடிய செயல்களை இக்காலத்தில் தவருக எண்ணமாட்டோம்.

ஆனல் வழக்கங்கள் எவ்வளவு மாறியபோதிலும், சில அடிப்படை உண்மைகள்- குறிப்பாக பழமையில் ஊன்றி வளர்ந்து அறநெறிக்கு ஆதாரமளிக்கும் கொள்கைகள் எக்காலத்திலும் மாற சான்ருேர் சமூகம் இடமளிக்காது.

பெண்குலம் இன்று ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக வாழவேண்டும், எத்தகைய பாகுபாடும் அகற்றப்படவேண்டுமென்று வாதாடி வெற்றிபெறுவதை நாம் கண்டு பொருமைப்படவில்லை.

அதேசமயம் அதற்கு இன்று கிடைத்திருக்கும் பேரிடிக்கு ஈடு கொடுப்பவர் யார்?

இந்தப் புண்ணிய நாட்டிலே இனக் கலவரம்தான் அப்பாவி மக்களை விண்ணுலகு அனுப்புகிறதென்று கவலை கொண்டவர்களுக்கு இன்று வெளியாகும்செய்தி இடிக்குமேல் இடியென்று வர்ணிப்பதே போதாது போல் தோன்றுகிறது.

நாட்டில் தினசரி ஐந்நூறு சட்டவிரோதமான கருச்சிதைவுகள் நடைபெறுகின்றன. இதுதான் நாம் குறிப்பிடும் கோரச்செய்தி.

இவ்வித பயங்கர சம்பவங்களில் கரு மட்டுமல்ல கருவைச் சுமந்தபெண்ணும் இறப்பது மிகச்சாதாரணமென்று கருதப்படுகிறது. அண்மையில் இவ்வித செயலில் பலியான இருபது வயதுப் பெண்ணின் மரணம் தொடர்பாக இருடாக்டர்கள்- வைத்திய நிடுணர்கள் என்றும் கூறப்படுகிறது — கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் சரணடைந்ததும், அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதும் செய்தி தட்டுப் பாட்டால் தவிக்கும் பத்திரிகைகளுக்கு நல்ல விருந்தாகும்.

ஏன், இந்தவழக்கு, விசாரணையைப் பார்க்க பெரும் கூட்டம் நீதிமன்றத்தில் திரண்டிருந்ததும் இது ஒரு சாதாரண குற்றமல்லவென்பதை குறிக்கின்றது.

தினசரி ஐந்நூறு பெண்கள் கருச்சிதைவில் ஈடுபட்டிருப்பது உண்மையானல், நீதிமன்றத்துக்கு வந்த வழக்கின் அபூர்வம் எவ்வாறு எழுந்தது?

நாம் வாழும் நாட்டில் நவீன நாகரிகம் எந்தவிதமான நூதன வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்தியபோதும், பொதுமக்கள் கடைப்பிடிக்கும் சமயப் பண்பாடு இலகுவில்அழிந்து விடமாட்டாது.

குடும்பத் திட்டம் என்ற ஒரு பதம் ஜப்பானியரின் கிமோனு என்ற கழுத்து நின்று கால்வரை போகும்- மேலாடை போல் பல இழி, பழி தொழில்களைக் கருதுவதாகக் காணப்படுகிறது.

கருச்சிதைவு சட்டத்துக்கு மாறான செயல் மட்டுமல்ல; பெண்ணின் கற்பு நெறிக்கு பாதகமானது; அதற்குமேல் பெண்ணுக்கு அகால யமனுகின்றது

மருத்துவ மனைகளிலும், போலி வைத்தியர்கள்மட்டுமல்ல மேனாட்டு விஞ்ஞான முறையில் பாண்டித்தியம் பெற்ற 'கலாநிதிகளும்' நிதிக்காக இந்தப் பயங்கர கலையில் ஈடுபடுவதென்ருல் சமூகத்தின் ஆத்மீகபலம் ஒருவித 'கடலரிப்பால்' கரைந்து போகின்றது.

பெண்ணைப் பாதுகாப்பதற்கு இன்று எவரும் அவளைப் பெட்டியில் பூட்டி வைப்பதில்லை

கல்வி, உலகியல் பழக்கம், ஒழுக்கம், தொழில் முதலிய துறைகளில் பயிற்சிபெறுவதும், தொழில் பார்ப்பதும் பெண்ணின் மனநிறைவைப் பலப்படுத்தும் வழிகளென ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சமூகச் சீர்கேடுகளால், உரிய காலத்தில் விவாகம் நடைபெருததால், குடும்பத்துக்கு சிறப்பளிக்கும் பிள்ளைகள் இன்று வேண்டாப் பண்டமாகையால் இவ்வித கொடிய வழக்கம் பரவிவருகிறது.

இல்லறவாழ்க்கை, குடும்ப பாசம், தமிழ் சமுதாயத்தின் மூலவேர்கள்; எந்தச் சமுதாயமும் சிறக்க இவை இன்றியமையாதவை.

எனவே சட்டத்தால் மட்டுமல்ல பொது மக்கள் விழிப்புணர்வால், வைத்திய சமுதாயத்தின் தொழில் மேம்பாட்டால் இந்தப் 'புற்றுநோய்க்கு' ஆரம்பத்திலேயே சிகிச்சையளித்து வெற்றி காண வேண்டும்.

### திருக்கார்த்திகை விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை- பன்னலை ருஷி ஈச்சுரம் கந்தசுவாமி கோவில் திருக்கார்த்திகைத் திருவிழாவும் நவோத்தரசத சங்காபிஷேகமும் 20 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

### சிற்றூழியர் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிற்சிற்றூழியர் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதன் காரணமாக இங்கு கடமையாற்றும் சிற்றூழியர்கள் தங்கள் லீவுகளைக் கூட எடுக்கமுடியாத நிலையில் இருப்பதாகப் புகார் தெரிவிக்கின்றனர்.

### இடமாற்றத்தை ரத்துச்செய்யக் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 14 தமிழ்ப் பொலிசார் 84 ஜனவரி மாதம் தொடக்கம் வெளி மாகாணங்களுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பானேர் தமது இடமாற்றத்தை ரத்துச்செய்துதருமாறு பொலிஸ் மேலிடத்திடம் விண்ணப்பித்திருப்பதாக அறியப்படுகின்றது.

வன்செயல்பற்றி ஆராய

# சர்வதேச வழக்கறிஞர்கள் பணியகம் விருப்பம்

## பிரதிநிதிகளை அனுப்ப அனுமதிகோருகிறது

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரங்களைப்பற்றி நேரில் ஆராய்வதற்குத் தங்கள் பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கும்படி ஜனநாயக வழக்கறிஞர்களின் சர்வதேசப் பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது.

புடாபெஸ்டில் நடைபெற்ற மேற்படி பணியகத்தின் கூட்டமொன்றில் இதுபற்றிய தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட சிரேஷ்ட வழக்கறிஞரான திரு. வி. ஆர். கிருஷ்ண ஐயர் இலங்கை அரசின் நடவடிக்கைகள்பற்றியும், பாகிஸ்தான் நிலைமைகள்பற்றியும் கொண்டுவந்த தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

''மறைப்பதற்கு ஒன்றுமே இல்லையென்று இலங்கை அரசு கூறுமானல் எமது கோரிக்கையை மறுப்பதற்கும் ஒன்றுமில்லையென்று'' திரு. ஐயர் கூறியுள்ளார்

யாழ்ப்பாணம், கொழும்பு ஆகியஇடங்களில் இடம்பெற்ற சம்பவங்கள்பற்றி அந்த இடங்களிலேயே ஆராய்வதற்கு மனித உரிமைக் குழு உறுப்பினர்கள் அங்கு சென்றிருந்தனர். அவர்களின் அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லையென்று திரு. கிருஷ்ண ஐயர் கூறினர்.

வடமராட்சிக்கு

# 157 பெட்டி விதை உருளைக்கிழங்கு!

(புலோலி)

வடமராட்சிப் பகுதி விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கென 157 பெட்டி விதை உருளைக்கிழங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியிலுள்ள அம்பன்கமநலச் சேவை நிலையப் பகுதி விவசாயிகளுக்கு 32 பெட்டி விதை உருளைக்கிழங்கும் புலோலி கமநலச் சேவை நிலையப்பகுதி விவசாயிகளுக்கு 125 பெட்டி விதை உருளைக் கிழங்கும் விநியோகிக்கப்படவுள்ளன. அம்பன் கமநலச் சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு, எஸ். பரமசிவராசா, புலோலி கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். கயிலைலிங்கம் ஆகியோர் இவ் விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கை விநியோகிப்பது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். விதை உருளைக்கிழங்கைப் பெறும் விவசாயிகள் அவ்வப்பகுதிப்பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களிடம் முற்பணத்தைக் கட்டிப் பதிவு செய்துள்ளனர். (க)

கடன் வழங்குவதற்கான

# வருமான எல்லையை அரசு தளர்த்தவேண்டும்

1984ம் ஆண்டு 10 இலட்சம் வீடுகள் அமைக்கும் பணியில் அரசு, குறிப்பாக பிரதமர் தீவிரமாக செயல்பட்டு வருகிருர். வீடற்ற இலட்சக் கணக்கானேர் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைய வாய்ப்பு ஏற்படுகிறது.

இன்று இலங்கையில் கிட்டத்தட்ட நாலாயிரம் கிராமோதய சபைகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கிராமோதய சபையும் இத்திட்டத்தின் கீழ் வீடுகளை கிராமங்கள் தோறும் நிர்மாணிப்பதற்கு 250 விண்ணப்பத் தாரிகளை சிபார்சு செய்யும்படி அரசினல் கேட்கப்பட்டுள்ளன.

மாச, வருமானம் 300 ரூபாவுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்டவர்களுக்கும் தான் இக்கடன் திட்டத்தில் வாய்ப்பு கிடைக்கின்றது. உணவு முத்திரை பெறும் சாதாரண குடிமகன் எவரும் இக்கடன் திட்டத்திற்கு மனுப்பண்ண முடியாது. ஆகவே இத்திட்டத்தினல் வீடற்ற சாதாண ஏழை மக்கள் பயன்பெற வாய்ப்பு இல்லை. உண்மையில் வீடற்றவர்கள் 300 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறும் உணவு முத்திரை வைத்திருப்போரே.

அடுத்து ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுபவர்களும் இத்திட்டத்தின் கீழ் கடன்பெற முடியாது. இன்று எங்கள் நாட்டில் வாழ்க்கைச் செலவை ஒப்பிடும்போது ஆயிரம் ரூபா மிகவும் குறைந்த ஒரு தொகையே

நான் சுழிபுரம் கிழக்கு கிராமோதய சபைத் தலைவராக உள்ளேன். எங்கள் கிராமோதய சபைக்கு பொதுமக்களிடம் இருந்து நூறு விண்ணப்பங்கள் வரையில் தான் கிடைத்துள்ளன. ஏனைய கிராமோதய சபைகளிலும் நிலைமை இதே போன்றது தான். காரணம் மக்களுக்கு கடன்பெற விருப்பமின்மை அல்ல, அரசின் வருமானக் கட்டுப்பாட்டு எல்லைக்குள் வீடற்ற அனேகர் கடனுக்கு மனுப்பண்ண முடியாமல் இருக்கிருர்கள்.

## மக்கள் கருத்து

ஆகவே அரசு கடன் வழங்குவதற்கான வருமானக் கட்டுப்பாட்டு எல்லைகளை தளர்த்தி ஒவ்வொரு கிராமோதயசபை தோறும் அரசின் திட்டத்தின்படி குறைந்தது 250 பேராவது புதிய வீடுகளை அமைத்து சுபீட்சமாக வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்று ஒரு கிராமோதயசபைத் தலைவர் என்ற முறையில் இத்திட்டத்தின் ஆணிவேராக இருந்து செயல்படும் கௌரவ பிரதமர் அவர்களை வேண்டுகிறேன்.

மு. சிவராசா,
சுழிபுரம் கிழக்கு,
கிராமோதய சபைத் தலைவர்.

### மாணவர்களே சிந்தியுங்கள்

இன்றுநீங்கள் மாணவர்கள். நாளை சமுதாய மேம்பாட்டின் தலைவர்கள். இன்றைய உங்கள் சீரிய சிந்தனைகளும் சிறந்த ஒழுக்கமுமே உங்களை அந்த உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்லும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

உலகப் பெரியார்களின் எண்ணிக்கையை நாம் விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனல் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை, காட்டிய நெறிமுறைகள், உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் உள்ளங்களில் எல்லாம் காலம் கடந்து பசுமரத்தாணிபோல் பதிந்து கிடக்கின்றன.

மகாத்மாகாந்தி, கார்ல் மாக்ஸ், ஆபிரகாம் லிங்கன் போன்றவர்களின் வாழ்க்கையை நாம் ஒருமுறை புரட்டிப் பார்த்தால் நம்மையெல்லாம் சிந்திக்கவைக்கும். அவர்கள் எண்ணத்தில் தூய்மை சொல்லினில் தூய்மை செயலினில் தூய்மை ஏன் அவர்கள் வாழ்வே தூய்மையெனலாம். ''இதனையே வள்ளுவரும் ''எண்ணியவை எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்மையராகப் பெறின்' என்ருர்.

இந்த திண்மையும் தூய்மையும் அவர்களுக்கு உடனடியாகக் கிடைத்தவைகளல்ல.

இளம் பிராயந்தொட்டே, மாணவ பருவத்திலேயே ஏற்பட்டவை. ஏன் ஊட்டப்பட்ட பண்புகள் அவர்களினல் படிப்படியாக உணரப்பட்டன. உணரப்பட்டவை உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டன. அந்த உணர்வுகள் அவர்களை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் வேலிக்குள் செவ்வனே வளர்த்தபடியால் அவர்கள் தலைவரானர்கள். அவர்களுக்கு உலகம் தலைவணங்கியது. ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள். மாணவப்பருவம் எவ்வளவு பசுமையானது. எத்தனை தூய்மையானது. காலங்கடுகளவும் நின்று செல்லாது. காலம் கடந்த பின் கவலைப்பட்டும் எவ்வித பயனுமில்லை. எனவே சிந்தியுங்கள். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுங்கள். நற்சிந்தனைகளை வளருங்கள். உங்கள் மனதை உறுதியாக வைத்திருக்க உலகப் பெரியார்களின் புத்தகங்களை, சரித்திர புருஷர்களை, ஆத்மீகத் துறை நூல்களை, நூல் நிலையங்களைத் துணையாகக் கொள்ளுங்கள். கல்வியின் நோக்கம் பதவி தேடுவதாக மட்டுமல்லாமல் அது எம் சிந்தனைகளை வளர்ப்பதாகவும்ஒழுக்க நெறியில் எம்மை உயர்வடைய வைப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

க. புண்ணியமூர்த்தி.

### யாருடையது?

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி சகாயமேரி என்பவர் திரு. ஜெயமனேகர் மாணிக்கநடராசா என்பவருடைய அடையாள அட்டையைக் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## வாழ்க்கைச் செலவுக்கேற்ப ‘புதிய சம்பளத்திட்டம் உருவாக்கப்படவேண்டும்’

(மாவிட்டபுரம்)

''வாழ்க்கை செலவுக்கேற்ப புதிய சம்பளத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்'' என்று கைத்தொழில் அமைச்சரைக்கோரும் தீர்மானம் ஒன்றை காங்கேசன் சிமெந்து பொதுத்தொழிலாளர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி சங்க வருடாந்தக் கூட்டம் சங்க மண்டபத்தில் திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

வீடு கட்டுவதற்கு வழங்கப்பட்டுவரும் கடனை 50,000ரூபாவாக அதிகரிக்கவேண்டும்.

தற்போது வழங்கப்படும் போனஸ் போதாமல் இருப்பதால் 2000/-ரூபாவாகக் கூட்ட வேண்டும்.

ஊக்குவிப்பு போனஸ் தற்சமயம் பகுதிக்கு தக்கதாக வழங்கப்படுகிறது. இந்தப் பாகுபாட்டை நீக்கி சகலருக்கும் ஒரே அளவு வழங்கவேண்டும்.

கஷ்டகால கடனை வழங்கப்படும் 3 மாதச் சம்பளத்தைக் கூட்டி 6 மாதச் சம்பளமாக வழங்கவேண்டும்.

மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வவனியா, மன்னார் சுகாதாரத்திட்டம்: உலக வங்கி மூன்று கோடி ரூபா நிதி உதவி

(வவனியா)

வவனியா, மன்னார் பகுதி சுகாதார திட்டத்துக்கு உலக வங்கி மூன்று கோடிரூபாய்நிதி உதவி வழங்கியுள்ளது.

இப்பகுதி சுகாதார வசதிகள் மேலும் விஸ்தரிப்பதற்கே குறித்த தொகையினை உலக வங்கி கொடுத்துள்ளது.

ஆரம்ப சுகாதார வேலைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

செட்டிகுளம், பேசாலை முருங்கன், நெடுங்கேணி ஆஸ்பத்திரிகள் தரம் உயர்த்தப்படுவதோடு நவீன வசதிகளும் ஏற்படுத்தப்பட விருக்கின்றது.

அத்தோடு மேலதிகமாக ஊழியர்களும், வைத்திய அதிகாரிகளும் போதிய கட்டிடங்களும் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

வவனியாவிலும் மன்னாரிலும் 30 கிராமிய சுகாதார நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிராமிய மட்டத்தில் சுகாதார வசதிகள் மேலும் விஸ்தரிக்கப்பட விருக்கின்றது.

அனைத்துக்கும் உலக வங்கியின் நிதி உதவி கிடைக்கவுள்ளது.

மன்னார்-வவனியா மாவட்ட தாய்-சேய் மருத்துவ அதிகாரி டாக்டர் திருமதி எஸ். மாணிக்கராஜா மேற்கண்ட தகவலை தெரிவித்தார். (க)

## தம்பகுதியிலுள்ள மூலவளங்களை அறிந்து திட்டம் தீட்டவேண்டும்

### கூட்டுறவுச்சங்கங்களுக்கு அறிவுரை

(புலோலி)

''கூட்டுறவுச் சங்கங்கள் தத்தமது பகுதி மூல வளங்களைத் தெரிந்து வைத்து அதற்கேற்பவே திட்டமிட வேண்டும். ஆனால் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் திட்டங்களைத் தீட்டுவதற்கு தமது பகுதியில் உள்ள மூலவளங்களைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருப்பதில்லை''

இவ்வாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான தொழில் தேர்ச்சிப் பயிற்சி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சிரேட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திருமதி உ. நல்லநாயகம் குறிப்பிட்டார். யாழ்ப்பாண பிரதேச கூட்டுறவுக் கல்லூரியில் பிரதேச கூட்டுறவுக் கல்லூரி அதிபர் திரு குமரேசபசுபதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திருமதி நல்லநாயகம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலவளங்களைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமது இலக்குகளை அடைய வேண்டுமாயின் திட்டமிடல் மிக இன்றியமையாததாகும். தேசிய கொள்கைக்கு ஏற்ப உற்பத்தி முயற்சிகளை மதிப்பீடு செய்து திட்டமிடப்பட வேண்டும். அத்துடன் முகாமைத்துவ மட்டத்தில் சேவை மனப்பான்மையும், இலாபம் பெறுவதற்கான திடசங்கற்பமும் அவசியமாகும் என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும் என்றார்.

## சீனிக்குத் தட்டுப்பாடு

(மாவிட்டபுரம்)

சீனிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள கடைகளில் சீனி கிடைக்காததால் மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாயுள்ளனர்.

வரவு—செலவுத் திட்டத்தின்பின் சீனிக்கு விலை அதிகரிக்கப்படும் என்ற காரணத்தால் வர்த்தகர்கள் பதுக்கி வைத்திருப்பதாலேயே இந்நிலை உருவாகியுள்ளதா?என்று மக்கள் கேட்கின்றனர்.

## காரைநகரில் மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர்ஈழத்துச் சிதம்பர சிவன்கோவிலில் அடுத்தமாதம் நடைபெறும் திருவெம்பாவை உற்சவக் காலத்தில் மூன்று நாட்களுக்கு மாணிக்கவாசகர் விழா சிறப்பாக நடைபெறும் முதல்நாள் மாணிக்கவாசகர் திருவுருவ ஊர்வலமும் அதனைத்தொடர்ந்து விழாவும் நடைபெறும். இம்முறை ஈழம் வாழ் சைவப்பெரியார்களும் அறிஞர்களும் பங்குபற்றுவார்கள். அத்துடன் ''திருவாதிரை மலர்'' என்னும் சிறப்பு நூலும் வெளியிடப்படும். காரைநகர் மணிவாசகர்சபையில் நடப்புவருட நிர்வாக அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. செ. தேவதாசன், செயலாளர் மு.வேலாயுதபிள்ளை, பொருளாளர் திரு. த. அம்பிகைபாகன் 21 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ''தமிழ் மக்களின் தனிப்பெரும் தெய்வம்''

(யாழ்ப்பாணம்)

''கந்தபுராணம் தமிழ் மக்களின் தலைசிறந்த புராணமாகும். கந்தபுராண படனம் ஆறுமுகநாவலர் அவர்களால் பல வருடங்களுக்கு முன் சீராக்கப்பட்டது கந்தபுராணத்தை முறையாக வாசிக்கவும், உரைசொல்லவும் தற்பொழுது ஒருசிலரே உளர். திரு. கா. நமசிவாயம் நீண்ட காலமாக இப்பணியைச் செய்துவருகின்றார். நல்லாசிரியராக அவர் விளங்கியதோடு சமய, சமூகப் பணிகளிலும் அதிகம் ஈடுபட்டுள்ளார். சைவ ஆசாரசீலராக போதனையில் மட்டுமல்ல; சாதனையிலும் சமய அனுஷ்டானங்களைத் தவறாது கைக்கொண்டு அவர் வாழ்பவராவர். அவருடைய வாழ்க்கை மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது'' என்று சுன்னாகம் மயிலணி கந்தசாமி கோவிலில் நடைபெற்ற கந்தபுராண படன பூர்த்திவிழாவிலே சிறப்புரை வழங்கிய முன்னாள் பெரும்பாக வித்தியாதிபதி திரு தி மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

விழாவுக்கு திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமை வகித்தார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

''கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் முருகப்பெருமான். தமிழ் மக்களின் தனிப்பெரும் தெய்வமும் முருகனே. முருகப் பெருமானுடைய சிறப்பை கந்தரலங்காரம், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தபுராணம் ஆகிய நூல்கள் விளக்குகின்றன. ஆனால் கந்தபுராணம் சிறந்த செந்தமிழ்க் காப்பியமாக விளங்குகிறது. புராண படனம்செய்வது, செய்விப்பது சைவ மக்களுடைய தலையாய கடமையாகும். முருகப் பெருமானுக்குரிய விரதங்களில் மேலானது ஷஷ்டி விரதமாகும். இப்புனித தினங்களிலே கந்தபுராணத்தைப் படிப்பது அதிக நன்மை பயக்கும். பௌராணிக வித்தகர் கா. நமசிவாயம் குருசிஷ்ய முறையிலே இதனைப் பயின்று கடந்த 42 வருடங்களாகச் சமயப் பணி ஆற்றிவருகிறார் எனக் குறிப்பிட்டார்.

பாராட்டுரை வழங்கிய தேவஸ்தான குருக்கள் பிரம்மஸ்ரீ ச. வரதராஜ ஐயர், பண்டிதர் அவர்களுடைய தமிழ்ப்புலமையையும், இசையுடன் சொற்பொழிவாற்றும் திறமையையும், புராணங்களுக்கு உரை கூறும் நுட்பத்தையும் எடுத்துக் கூறினார். பிரம்மஸ்ரீ சி. வெங்கடேஸ்வர சர்மா பாராட்டுரை வழங்கினார். (மா)

## நவாலியூரில் இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 21-ம் திகதி தொடக்கம் டிசம்பர் 10-ந் திகதிவரைம் நவாலியூர் சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது. இலங்கையில் முதன் முதலாக ஐந்து முகம்கள் கொண்ட பஞ்சமுகவிநாயகர் விக்கிரகம் இந்த ஆலயத்திலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1951-ம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட இவ்விக்கிரகத்துக்கு அவ்வாண்டிலிருந்து இன்றுவரை ஆண்டுதோறும் விநாயக விரதகாலத்தில் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது. பஞ்சமுக விநாயகருக்கு ஐந்து குருக்கள்மார் சுற்றி நின்று அர்ச்சித்துத் தீபாராதனை இயற்றுவது ஒரு சிறப்புமிக்கக் காட்சியாகும்.

இவ்விக்கிரகம் வட இந்தியாவினுள்ள காசிவிசுவநாதர் ஆலயத்திலிருந்து இக்கோயிலுக்கு முன்னைய தர்மகர்த்தாவான பிரம்மஸ்ரீ சோமசுந்தரக் குருக்களினால் கொண்டுவரப்பட்டு அவர்மூலம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த இலட்சார்ச்சனையை இன்றைய தர்மகர்த்தாவான பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக் குருக்களும் பிரதிஷ்டாசிரோன்மணி சாமி விஸ்வநாதக்குருக்களும் முன்னின்று நடத்துகின்றனர். (மா)

## பழைய இடங்களுக்குச்செல்ல 39 அகதிகள் விருப்பம்!

(வவனியா)

வவனியா-ஓமந்தை முகாமில் தங்கியிருந்தவர்களில் 39 பேர் மீண்டும் பழைய இடங்களுக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோனின் வவனியா விஜயத்தின் பின்பே குறித்த 39 பேரும் தமது முன்னைய இடங்களுக்குசெல்ல விருப்பம் கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

கடுவலை, எல்பிட்டி பகுதிகளில் வியாபாரம் செய்தவர்களே திரும்பிச்செல்ல விரும்பியுள்ளனர்.

இவர்கள் கலவரத்தினால் பாதிப்புக்குள்ளாகி வவனியா வந்து முகாமில் தங்கி இருந்தனர்.

பழைய இடங்களுக்குச் சென்று மீண்டும் வியாபாரம் செய்யவே இவர்கள் அரசிடம் உதவி கோரியுள்ளனர். (க)

## ரூபா 2000 அபராதம்

(மாவிட்டபுரம்)

சட்டவிரோதமாக கசிப்பு தயாரித்ததாக கைதான பெண்ணுக்கு மல்லாகம் நீதிபதி 2000 ரூபா அபராதம் விதித்தார்!

கட்டுவனைச் சேர்ந்த இவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது பொருட்களை பறிமுதல் செய்து 2000 ரூபா அபராதம் மல்லாகம் நீதிபதியால் விதிக்கப்பட்டது.

அருள்சீலன் மனோகரசீலன் என்னும் 16 வயது இளைஞர் 3 போத்தல் சாராயத்தை வைத்திருந்ததாக கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிபதி அவரை அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

## மருதனாமடம் சந்தைக் குத்தகை; விண்ணப்பத்தை நிராகரிக்க விவசாயிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மருதனாமடம் சந்தையில் பொருட்களை விற்பனைசெய்பவர்களிடமிருந்து கூடுதலான சந்தைக்கட்டணம் அறவிடப்பட்டுவருவதினால் தமது பொருட்களைச் சந்தையில் விற்பனைசெய்யும் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இதுதொடர்பாக துண்டுப் பிரசுரமொன்று இப்பகுதி விவசாயிகளினால் வெளியிடப்பட்டுள்ளது.

இத்துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்தச் சந்தையில் இரண்டு வருடங்களாக சந்தைக்கட்டணம் அறவிடுவது குத்தகை அடிப்படையில் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் அதிகமான கட்டணத்தை அறவிடுகின்றார்கள், இந்த ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட குத்தகை எல்லை 2,40,000 ரூபா என்பதாகக் காணப்படுகிறது. இதனால் இப்பகுதி விவசாயிகள் முன்னைவிட அதிகம் பாதிக்கப்படவுள்ளார்கள்.

இதனால் இச்சந்தையை குத்தகைக்கு எடுக்கும் தனியார் இவ்வாண்டு விண்ணப்பம் அனுப்பாது இக்குத்தகையை நிராகரித்து ஏழை விவசாயிகளுக்கு உதவும்படி கேட்கப்பட்டுள்ளது. (சு-மா)

## கருச்சிதைவுச் சம்பவம்: வைத்திய நிபுணர்கள் நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

கருச்சிதைவு காரணமாக வெலிகமையைச் சேர்ந்த 20 வயது இளம்பெண் யு. ஜி சுசாந்தியின் மரணம் தொடர்பாகத் தேடப்பட்டுவந்த இரு வைத்திய நிபுணர்களும் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர்.

டாக்டர் எஸ். ஆர் ரட்ணபால, டாக்டர் ஆரியசேன வனிகநேத்தி ஆகியவர்களே அவ்விரு வைத்திய நிபுணர்களும்.

இரு டாக்டர்களும் உடல்நலமில்லையென அறிவித்துள்ளதால் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் இருவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி கோட்டை நீதிமன்ற நீதிபதி ஜனப் எஸ். எஸ். இமாம் உத்தரவிட்டார்.

## தாய்சேய் நலவகுப்பு

(யாழ்ப்பாணம்)

கல்லாரை குடும்ப சுகநலத் திட்ட சங்கத்தின் அனுசரணையுடன் தாய்சேய் நலவகுப்பு ஒன்று அண்மையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க காரியாலயத்தில் இடம்பெற்றது.

மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. ஜே. பி.குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி வகுப்பின் போது ஏராளமான தாய்மார் பங்குபற்றினர். திருமதி. ரி. துரைசிங்கம் போதனாஆசிரியையாக கடமையாற்றினார்.

இந்திய விஸ்வ சம்ஸ்கிருத பரிஷத்

## யாழ். கிளை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

அகில இந்தியவிஸ்வ சம்ஸ்கிருத பரிஷத்தின் யாழ்ப்பாணக்கிளை நல்லூர் ஆதீனத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. வால்மீகி தினவிழாக் கொண்டாட்டத்தையடுத்து இவ்வங்குரார்ப்பணவைபவம் இடம் பெற்றது

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்றவைபவத்தில், பேராசிரியர் கலாநிதிகா. கைலாசநாதக் குருக்களும் திரு கே. எ. செல்வரத்தினமும் சிறப்புரை ஆற்றினார்கள்

தமிழ்நாட்டில் உள்ளபாண்டிச்சேரியின் கிளையின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணக்கிளை அமையும் என்றும், பாண்டிச்சேரிக்கிளைக்குழுவில் கலாநிதி கைலாசநாதககுருக்களும் ஒரு உபதலைவராகவும், இலங்கையின் அமைப்புச் செயலாளராகவும் கடமையாற்றிவருகிறார் என்றும் இவ்வைபவத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக்கிளையின்நோக்கம் யாழ். குடாநாட்டில் இலவச சம்ஸ்கிருத வகுப்புகள் நடாத்துதலாகும் இவ்வகுப்புகள் நடாத்துவதற்கு வட்டுக்கோட்டை, யாழ். மாநகர சபைப்பகுதி, வடமராட்சிப் பகுதி, வடமராட்சி ஆகிய மூன்று இடங்களும் தெரிவு செய்யப்பட்டு முறையே டாக்டர் ஆ. தர்மலிங்கம், பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரசர்மா, செல்வி இந்திராசிற்றம்பலம்ஆகியோர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பரிஷத்தின் ஒருகிளை சகாகிளையுடனே அல்லது தாய் நிறுவனத்துடனே தொடர்பு கொள்ள சமஸ்கிருதமொழி மட்டுமே பாவிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பேராசிரியர் கலாநிதி கா கைலாசநாதக்குருக்கள் தலைவர் கலாநிதி பி கோபாலகிருஷ்ணன் உபதலைவர் சிவஸ்ரீ ஆர். பாலசுப்பிரமணிய ஐயர். இணைச்செயலாளர்கள்: பிரம்மஸ்ரீ பீ. சர்வேஸ்வரசர்மா டாக்டர் ஆ. தர்மலிங்கம் பொருளாளர்: திரு. கே. எம். செல்வரத்தினம்.

செயற்குழு உறுப்பினர்களாக செல்வி. என். குழந்தைவேலுசிவஸ்ரீஎஸ். சுப்பிரமணிய ஐயர், செல்வி இந்திரா சிற்றம்பலம், சிவஸ்ரீ ஏ. கே. சர்மா. திருமதி எஸ். சோமசுந்தரம் ஆகியோர் தெரிவாகினர்.

இவர்கள் இம்மாதம் 20-ம் திகதி பிற்பகல் நல்லை ஆதீனத்தில், போஷகர்கள் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார் (மா)

## பழையமாணவர் சங்கக்கூட்டம்

(மாவிட்டபுரம்)

வீமன்காமம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் அதிபர் திரு. மு. சிவராசா தலைமையில் நடந்த சமயம் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப் பட்டனர். தலைவர்: மு. சிவராசா (அதிபர்), உப-தலைவர்கள்: சி. குமாரபாரதி, ச. கந்தசாமி, இணைச் செயலாளர்கள்: சோ செல்வரத்தினம், வ. கிருஷ்ணபிள்ளை, பொருளாளர்: கு. கந்தையா, நிர்வாக சபை உறுப்பினர்கள்: க. ஸ்ரீகாந்தலிங்கம், ஏரா. குகநாதன், ப சுப்பையா, க. சுப்பிரமணியம், ந கெங்காதரன், க கனகராசா, வை. சந்திரபாலன், செல்வி ச. சிவமகேஸ்லீலா, செல்வி க. பாலசௌந்தரி.

# யாழ் இந்து மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றது!

(யாழ்ப்பாணம்)

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கம் இலங்கை அறிவியல் பரப்பும் குழு நடாத்திய வடமாகாண இறுதி விஞ்ஞான வினாப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டியில், வவனியா, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த க. பொ. த. உயர்தர பாடசாலைகள் உட்பட முப்பது பாடசாலைகள் பங்குபற்றியதும்குறிப்பிடத்தக்கது.

## புகார்!

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகத்திற்கு இதுவரை தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப் படுகின்றது

## இன்றைய பலன்

கார்த்திகை 1-ந் திகதி
வியாழக்கிழமை
(17-11-83)

மேடம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் இருமனம் கலந்தவர்களில் மத்தியில் இனிமை தவழும்.

இடபம்: பொருளமையின்நிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யப்போய்உபத்திரவத்தை தேடிக்கொள்வீர் அரசபயத்துக்கு இடம் ஏற்படும் ஆகையால் வழக்கு விவகாரத்தில் ஈடுபடவேண்டாம்.

மிதுனம்: அந்தஸ்த்தில் உயர்வு தென்படும் எதிர்பார்த்த உதவி இன்று கிடைக்கும் வாகனம் கொள்வனவு செய்ய முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும்.

கடகம்: எண்ணிவது எண்ணியபடி நடக்கும் உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் உண்டு மக்களின் செல்வாக்கு மனதைக் குளிரவைக்கும்.

சிங்கம்: பகைமூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் சிறிய விடயத்திற்குக்கூட குறை கேட்க நேரிடும் கடற்றொழிலில் ஈடுபடுவோர் கவனம் வேண்டும்.

கன்னி: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும் களஸ்திரவழியால் பொருள் வரவுண்டு பெரியோர் மதிப்புக் கிடைக்கும் இல்லத்தில் இனிமை தவழும்.

துலாம்: முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள் சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லை அதிகரிக்கும்.

விருச்சிகம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர் அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள் பிதாவழிச் சுகமும் கிடைக்கும்.

தனு: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும் சிலர் வாழ்க்கையில் கடல்கடந்து பிரயாணம் செய்ய உகந்த தினம்.

மகரம்: பொருளாதார நிலை சீரடையும் பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படலாம் வெளியூர் செய்தியும் கிடைக்கும் இனசன உதவியும்உண்டு.

கும்பம்: அதிகசிந்தனை தலையிடியைக் கொடுக்கும் உடல் நலம் பாதிக்கப்படலாம் வைத்தியச் செலவு அதிகரிக்கும் வீணேபொருளினுல் பணம் விரயமாகும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## வாவியில் மிதந்த சடலம்: விபத்துமரணம் என்று தீர்ப்பு

(மாவிட்டபுரம்)

தொண்டமனுறு வாவியில் மிதந்த 20 வயது வாலிபரது மரணம் தொடர்பாக நடைபெற்ற மரணவிசாரணையில் இது ஓர்விபத்துமரணம்என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தொண்டமனுறு வாவியில் இளைஞர் ஒருவரின் சடலம் மிதப்பதாக காங்கேசன் துறைப் பொலிசாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டதையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் மரணவிசாரணைக்கு ஏற்பாடு செய்தனர். திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. நா தம்பிராஜா விசாரணை நடத்தினார்.

காலமானவர் சம்பவதினம் தமது அடையாள அட்டையையும் மற்றும் தஸ்தாவேஜுகளையும் தொண்டமனுற்றிலுள்ள கடையொன்றில் வைத்துவிட்டுச் சென்றிருந்ததால் இவர் பொலிகண்டியைச் சேர்ந்த இராஜரத்தினம் ஸ்ரீஸ்ரங்கநாதன் என்னும் 20 வயது வாலிபர் என அடையாளம் காணமுடிந்தது.

விசாரணை முடிவில் விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது. காங்கேசன்துறைப் பொலிசார் மரணவிசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

வடிசாராய வழக்கு:

## 2000 ரூபா அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறையும்!

(யாழ்ப்பாணம்)

வடிசாராயம் காய்ச்சியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதக்கடூழியச்சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் மேலதிக நீதவான் திரு. வரதராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சண்டிலிப்பாயைச்சேர்ந்த நாராயணன் கந்தசாமி. வடிசாராயம் காய்ச்சியதாகவும், 14250 ரும் கோட்டாவைத்திருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது எதிரிகுற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்புவழங்கப்பட்டது..

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு இம்மாதம் 20-ம் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில்நடைபெறவுள்ளது

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி பரிசளிப்பு விழா இம்மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. வைத்திய கலாநிதி எம். வேற்பிள்ளையும், பாரியாரும் பிரதம அதிதிகளாக கலந்து கொள்வார்கள்

## மாதகல் மர்ம மரணம்: சந்தேக நபர்கள் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

மாதகல் மர்ம மரணம் சம்பந்தமான ஏழு சந்தேக நபர்களையும் 1000 ரூபா பிணையில் செல்ல மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

மாதகல் மர்மமரணம்சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருந்த மாதகலைச் சேர்ந்த தங்கராசா சண்முகநாதன், சோதிலிங்கம் விஜயகுமார், சபாரத்தினம் இராமச்சந்திரன், முத்துக்குமாரு சிவபாதம் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு நிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இச்சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிசாரால் தேடப்பட்ட இராமசாமி சோமசுந்தரம், செல்லக்குட்டி விஜயரத்தினம், இராசலிங்கம் விக்கினேஸ்வரன் ஆகியோர் காங்கேசன்துறை பொலிசில் சரணடைந்தனர்.

மேற்படி ஏழு நபர்களும் மல்லாகம் நீதிபதி திரு சி வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு ஆர். ஜே. செல்வரத்தினம் நீதிபதியிடம் எடுத்துக் கூறியதாவது:

"இவ்வழக்கில் சாட்சியம் எதுவும்இல்லை. இறந்தவர் யார் என்பதும் இதுவரை தெரியாது. டாக்டரின் சாட்சியப்படி, என்ன காரணத்தால் இம்மரணம்சம்பவித்ததுஎன்று முடிவு எடுக்க முடியாது உள்ளது, இது ஒரு கொலை என்று கூறும் அளவுக்கு சாட்சியம் இல்லை. ஆகையினால் இவர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு தாக்கல் செய்ய முடியாது. இந் நிலையில் விசாரணை முடியவில்லை என்று பொலிசார் கூறும் காரணத்தை ஏற்க முடியாது. ஆகவே வீணே இவர்களை நிமாண்டில் வைக்காது பிணையில் அனுமதிக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து நீதிபதி 7 நபர்களையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை இம்மாதம் 28-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஏராளமானவர்கள் இவ்வழக்கைப் பார்க்க நீதிமன்றத்தில் கூடியிருந்தனர்.

மேற்படி சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்துடன் சட்டத்தரணிகள் கே. விஞேதன், எஸ். சிறிதரன். எஸ். லோகேஸ்வரன், திருமதி கமலா சொர்ணலிங்கம், கே. விஜேந்திரா ஆகியோர் ஆஜராஞர்கள். பொலிஸ் தரப்பில் சார்ஜன்ட் ரி. தியாகராசா ஆஜராஞர்.

## 'குறுநாவல் போட்டி பரிசளிப்பு'

(யாழ்ப்பாணம்)

இரசிகமணி கனக. செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி பரிசளிப்பு வைபவம். யாழ்ப்பாணம். பொண்ட் கல்விநிலையத்தில் இம்மாதம் 19-ம் தேதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

யாழ் இலக்கியவட்டமும், மல்லிகையும் இணைந்து நடாத்திய இப்போட்டி பரிசளிப்பு பாராட்டு வைபவத்தில் திரு. மௌனகுரு. திரு. ச. பத்மநாதன் ஆகியோர் பரிசுக் கதைகள்பற்றி கருத்துரை வழங்குவார். செங்கை ஆழியான். டோமினிக் ஜீவா ஆகியோர் இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளனர். (க)

## காய்கறி விலை திடீர் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தையில் மரக்கறிவகைகளின் விலைகள் இவ்வாரம் தொடக்கம் மிகவும் அதிகரித்துள்ளன.

கத்தரிக்காய் ஒருகிலோ எட்டு ரூபாவாக விற்கப்படுகிறது. ஒருபிடி கீரை ஒருரூபா தொடக்கம் ரூ.1-50வரை விற்கப்படுகிறது. நல்ல தேங்காய் வாங்கவேண்டுமானுல் 5 ரூபா கொடுக்க வேண்டியுள்ளது.



பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ராஜா (யாழ் நகர்)
தினசரி
10-30, 2-30, 6-00, 9-30
ராஜீவ் - ஜோதி ஸ்ரீ நாத்
ரயில்
பயணங்களில்

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
ஊரும் உறவும்
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-30, 6-30
நாகேஷ் - விஜயலலிதா
தேன் கிண்ணம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி - வாணிஸ்ரீ
வசந்த மாளிகை
(புதிய பிரதி)
18-11-83 முதல்
சிவகெங்கைச்சீமை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00 4 30, 7-00
URSULA ANDRESS
LAURENCE OLIVER
Clash of The Titans
(Entertainment for the Whole Family)
25ந் திகதி முதல்
மூன்றும் பிறை

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
திறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

THE MOST EXPLOSIVE PICTURE OF THE YEAR
Regal Jaffna
Daily 10-30 a m. 2-30
4-45, 7-00 only
CHARLES BRONSON..
TELEFON
a terrifying action packed-adventure
வெகுவிரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

லிடோ (யாழ். நகர்)
தினசரி
1-30, 3-15, 6-30,
விடியும்வரை
காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
If I have seen it;
you better see it.
This is the film not
to be missed.
36th Chamber
of Shaoline
தினசரி 4 காட்சிகள்

# 'ஊழியரதும், மக்களதும் அன்பைப் பெற்றிருந்தார்'

(யாழ்ப்பாணம்)

'யாழ். கச்சேரியின் சிரேஷ்ட உத்தியோகத்தரான திரு ஆனந்தன் பொறுமையுடன் பணியாற்றி, ஊழியரதும் அவரை நாடிவரும் மக்களினதும், அன்பைப் பெற்றிருக்கிறார். அவர் யாருடனும் பேசுவார், ஆலோசனை வழங்குவர், நேரக் கட்டுப்பாடின்றி சேவையாற்றுவார்.'

யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு, ஜே. எஸ். எஸ், ஆனந்தன், ஓய்வுபெற்றதையிட்டு நடந்த பிரிவுபசார விழாவில் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மேற்கண்டவாறு கூறினார்.

உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ். நடராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மேலும் கூறியதாவது: 'திரு ஆனந்தன், ஓய்வு பெறப்போகிறார் என்று அறிந்ததும், அவருக்கு 55 வயது வந்து விட்டதா என ஆச்சரியப் பட்டேன். பின் அவரின் ஓய்வுபெறும் பத்திரங்களைப் பார்த்த போது அவருக்கு 59 வயதாகி விட்டதையும் கடைசி சேவை நீடிப்பும் வழங்கப்பட்டதையும் அறிந்தேன். அவர் இந்த வயதிலும் இளைஞர் போல், சுறுசுறுப்பாகவும், உற்சாகத்துடனும் பணியாற்றினார், இளைப்பாறிய பின், முழுநேரத்தையும் அவர் சமயத்தொண்டிலும், சமூக சேவையிலும் பயன்படுத்தும் வாய்ப்பைபெற்றுள்ளார். அவர் சமூக சேவையிலும் ஈடுபட்டு, எல்லோருக்கும் எருவழிகாட்டியாக இருந்து வருகிறார்'

திரு. எஸ். நாகராசா பேசுகையில், 'உணவுக் கட்டுப்பாட்டு பகுதி வேலைகளை மட்டுமன்றி மற்றும் பகுதிகளுக்குத் தேவையான போது ஆலோசனை வழங்கி சகல ஊழியரினதும் அன்பையும் திரு. ஆனந்தன் பெற்றிருந்தாரென்றும் அவர் யாழ்ப்பாண கச்சேரியின் சகாப்தமாக விளங்கினார்ரென்றும்' கூறினார்.

திரு கனகலிங்கம் பேசுகையில்: திரு. ஆனந்தன் ஊழியருக்குமட்டுமன்றி மக்களுக்கும் பெரும் உதவியாக இருந்தாரென்றும் கடும் உழைப்பாளி என்றும் இவரை மற்றும் ஊழியர்கள் பின்பற்ற வேண்டும் என்றும் கூறினார்.

திரு. மனோகரன் பேசுகையில் கூறியதாவது, 'யாழ். மாவட்டத்தில், அவர் 12 வருடகாலம் ஒரு பிரச்னையுமின்றி பணியாற்றி வந்தார். பிரச்னைகளை அவர் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்து விடுவார். எந்த பிரச்னையென்றாலும் இலகுவில் தீர்த்துவிடுவார், ஊழியருக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவார்' என்றார்

மற்றும் பலர் பாராட்டிப் பேசினார்கள். (க)

உதைபந்தாட்டம்:

## வெற்றி-தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில், 'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் சென். ஜோன்ஸ் கோஷ்டி வேகமாக விளையாடியதால், இடைவேளையின் போது இக் கோஷ்டி 3-1 கோல்களால் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின் யாழ். மத்திய கல்லூரி மிகசாதூரியமாக விளையாடி மேலும் இரு கோல்களைப் போட்டனர். ஆட்டமுடிவில் இரு கோஷ்டியினரும் தலா 3—3 கோல்களைப் போட்டிருந்தனர், யாழ். மத்திய கல்லூரிக் கோஷ்டியின் முன்னணி வீரர் போல்பிரகலாதனின் ஆட்டம் சிறப்பாக இருந்தது,

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு, திரு. ஏ.தேவராசா மத்தியஸ்தம் வகித்தார். (வி)

## இன்றைய பலன்---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்: பகைவர்கள் பதுங்குவர் பாதையில் பழுதுண்டு நம்பிக்கைமோசடி மூலம்பொருளை இழக்க நேரிடும் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

வின்ஸர் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-15
கமல் - ரஜனி - ஜெமினி
ஸ்ரீபிரியா - ஜெயசித்ரா
அலாவுதீனும்
அற்புத விளக்கும்
(கலர் - புதிய பிரதி)
விரைவில்!
ஆனந்த ராகம்

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மன்னார் மாவட்ட
நீதிமன்றத்தில்

மன்னார் ஸ்டேசன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கர ஆசாரி முத்துஆசாரி கருப்பையா ஆசாரியின் மரணசாசன சொத்தின் விடயத்தில்.
-மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. T/8/83

மன்னார் ஸ்டேசன் வீதியைச் சேர்ந்த கறுப்பையா ஆசாரி இராம கிருஷ்ண
மனுதார்.

எதிர்

மன்னார் ஸ்டேசன் வீதியைச் சேர்ந்த

1. கருப்பையா ஆசாரி அச்சுதன்
2. கருப்பையா ஆசாரி சுந்தராம்பால்
3. கருப்பையா ஆசாரி கைம்பெண் சோலை அம்மா

-பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாசனத்தைநிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஐப்பசி மீ 4-ம் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
மூ. பத்மநாதன்,
பதிவாளர்.

மன்னார்.

4-10-83 காரணம் காட்டும் திகதி 22-11-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
மூ. பத்மநாதன்,
பதிவாளர்.

9915

மகாதேவா பாலம் சீரமைப்பு:

# ரூ. 32 லட்சம் தேவையாம்

[ஏ. வி. மாணிக்கம்]

கேரதீவு-சங்குப்பிட்டி மகாதேவா தாம்போதி இருபக்கமும் 2500 அடி நீள வேலைகள் முடிவுற்றுள்ளன. இனி இரும்புப்பாலம் அமைக்கவேண்டிய வேலைதான் பாக்கியுள்ளது. எனினும் நிறைவேற்றப்பட்ட 2500 அடி நீளப்பாதையைச் சீர்செய்வதற்கு 32லட்சம்ரூபா தேவைப்படுகிறது. இப்பணம் விரைவில் கிடைக்கும்பட்சத்தில் அடுத்த ஆண்டுக்குள் தாம்போதி செப்பனிடும் வேலைகள் பூர்த்தியாகிவிடும்.

மேற்கண்டதகவலை யாழ். திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு எஸ். சிவதாசன் தெரிவித்தார்.

சராசரி மாதம் ஒன்றுக்கு 100 அடி வீதம் 24 மாதத்தில் தாம்போதி வேலைகள் நடைபெற்றன என்று தெரிவித்த திரு. சிவதாசன், 3 லட்சம ரூபா அளவில் சிரமதான வேலைகள்மேற்கொள்ளப்பட்டதென்றும் அறுபது லட்சம் ரூபாவரை செலவுசெய்யப்பட்டதென்றும் சொன்னார்.

இந்த நிதி யாழ். மாவட்ட எம். பிக்களுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மகாதேவா தாம்போதி வேலைகள் பூர்த்தியானதும் 660 அடிக்கு பாலம் அமைப்பதற்கு, சுமார் 3கோடி ரூபா தேவைப்படுவதாகவும், இதற்கு 83-ம் ஆண்டுக்கு பிரதம மந்திரி 30 லட்சம் ரூபாஒதுக்கியிருந்தும், இதுவரை அது வந்துசேரவில்லை என்றும் அவர் கவலைதெரிவித்தார்.

பணம் வந்து சேர்ந்ததும் உடனடியாகப் பாலவேலைகளும் ஆரம்பிக்கப்படும் என்றும், மேலும் வெளிநாடுகளிடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் நிதிஉதவி எதிர்பார்ப்பதாகவும் திரு சிவதாசன் குறுப்பிட்டார்.

இப்பாதை முழுமையாகப் போடப்பட்டதும் யாழ்ப்பாணத்துக்கும் — மன்னாருக்குமிடையே உள்ள போக்குவரத்துக்கஷ்டங்கள் அறவே நீங்கிவிடும். (மா)

ப. நோ. கூ. சங்கங்களில்

# கொள்ளை நடப்பது வேதனைக்குரியது!

(புலோலி)

'பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அடிக்கடி கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருவது மிகவேதனைக்குரியதும் மக்களைப் பாதிக்கக் கூடியதுமாகும். எனவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுத்துக் கொள்வதற்கு நாம் மிக நுட்பமாகவும் நிதானமாகவும் செயலாற்ற வேண்டியது முக்கியமாகும்'

இவ்வாறு, கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்றுவரும் கொள்ளைகளை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றி ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபை அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய யாழ் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு எஸ். சிவமகாராசாகுறிப்பிட்டார்.

திரு. சிவமகாராசா தொடர்ந்து உரையாற்றுகையில்குறிப்பிட்டதாவது:

கூட்டுறவு இயக்கம் என்பது மக்கள் இயக்கமாகும். இம் மக்கள் இயக்கத்தை கொள்ளை போன்ற தீய செயல்களினால் பாதிக்கப்பட இடமளிக்கக் கூடாது. இவற்றைப் பாதுகாக்க வேண்டியது எமது பாரிய பொறுப்பாகும்.

அண்மையில் சில தெங்கு பனம் பொருள் உற்பத்திவிற்பனவுக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் தீக்கிரையாக்கப் பட்டபேரது சீவல் தொழிலை நம்பிவாழும் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் வட பகுதிக் கூட்டுறவு இயக்கத்தையும் பாதிக்கும் செயலென்றும் இச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுத்தேன் இப்போது அச்செயல்கள் நிறுத்தப்பட்டு விட்டன பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நடைபெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களையும் நடைபெறாமல் இருக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்களான திரு. எஸ். ஞானப்பிரகாசம் திரு. இ. ஜெகநாதன் மக்கள் வங்கி உதவிப் பிரதேச முகாமையாளர் திரு. எஸ். நடராசா ஆகியோரும் உரையாற்றினர். சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களும் பொது முகாமையாளர்களும் சமூகமளித்திருந்தனர். (க

## திருடமுயன்றவர்கள் சிக்கிக்கொண்டனர்

(சுழிபுரம்)

பட்டப்பகலில் வீடு பிரித்து உள்ளே புகுந்த இரு கள்வர்கள் அயல் வீட்டவரால் உடன் மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள்.

பண்ணாகம் தெற்கு சின்னையா தயாபரசிவம் என்பவரின் வீட்டில் நேற்றுப் பகல் பத்து மணியளவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் உள்ளே புகுந்து களவு எடுக்க முயன்றுகொண்டிருக்கையில் அயல் வீட்டைச்சேர்ந்த எஸ். விசுவலிங்கம் என்பவர் கண்டு பலரது உதவியுடன் கள்வர்களை மடக்கிப்பிடித்துக்கொண்டனர்.

வீட்டுக்காரரான சி. தயாபரசிவம் வேலைக்குச் சென்றுவிட்டாரென்றும் இவரது மனைவி த. கமலாதேவி உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருக்கையிலேயே இச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது வீட்டுக்குள்ளே இருந்த இரு கள்வர்களும் பெட்டிகளைக் கத்தியால் வெட்டிப்பிரித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

கிராமசேவையாளரிடம் இரு சந்தேகநபர்களையும் ஒப்படைத்து விசாரணைக்காக காங்கேசன்துறைப் பொலிசுக்குக் கொண்டுசென்றனர்.

# "வெளிநாட்டு உதவிகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது!"

## நிதி அமைச்சர் கூறுகிருர்

(கொழும்பு)

எமது நாட்டின் அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு உதவிகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது. வெளிநாட்டு உதவிகளில் அதிகளவு தங்கியிருக்காது எமது சேமிப்புக்களை அதிகரித்து முதலீடுகளைப் பெருக்குவதன் மூலமே நாம் முன்னேற வேண்டுமென்று நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் பட்ஜட் உரையில் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு உதவிகளை அதிகம் பெறுவதினுல் அக்கடன்களை திருப்பிச் செலுத்த முடியாதநிலை ஏற்படுகிறது. இக்கடன் பிரச்னை பல பாரிய நெருக்கடிகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடியது. இதனுல் நாம் பெருமளவுக்கு வெளிநாட்டு உதவிகளைக் குறைக்க வேண்டியுள்ளது. உள் நாட்டில் சேமிப்பினை பெருமளவு அதிகரித்து அதன்மூலம் முதலீட்டினை அதிகரிக்கவேண்டும்.

உற்பத்தி நிறுவனங்கள் நிதி விவகாரத்தில் மிகவும் கண்டிப்பாகவும், அவதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும். நிதி வீண் விரயத்தை தடுக்க பெரும் போராட்டமே நடத்த வேண்டியுள்ளதென்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வேலை வாய்ப்புக்களைப் பொறுத்தவரை 1977—82 காலப்பகுதியில் வேலையில்லாப் பிரச்னையை அரைவாசி குறைத்துள்ளோம். வேலை வாய்ப்பினைப் பொறுத்த மட்டில் மனித உழைப்புக்கள் இக்காலப் பகுதியில் பெருமளவு பயன் படுத்தப்பட்டுள்ளது.

### தேசிய பொருளாதாரம் பெரும் பாதிப்பு

அண்மையில் ஏற்பட்ட இனக்கலவரங்களினுல் தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இதற்காக அகில இலங்கை ரீதியாக நிதிநிர்வாகம் பலமாக இருக்க வேண்டும். மூலதனம் சரியானமுறையில் நிர்வகிக்கப் பட வேண்டுமென்ருர்.

அரசாங்க முதலீடுகளில் பெருந்தோட்டதுறைக்குக்கூடிய முக்கியத்துவம் வழங்கப்படும். குறிப்பாக சிறிய தேயிலை, றப்பர் புனர்நடுகைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளை அதிகரிக்க பெருமளவு நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்றுமதி வருமானங்களை அதிகரிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏற்றுமதியில் ஈடுபடுபவர்களுக்கு இதற்காக தீர்வைமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

### தனியாருக்கு ஊக்கம்

எரிபொருள் துறையில் கவன மெடுப்பது பற்றியும் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. அத்தியாவசிய துறைகளைப் பொறுப்பேற்றவரை கூடுதலான அக்கறை செலுத்தப்படவுள்ளது. மக்களின் போஷாக்கினை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் இதிலும் தகுந்த மாற்றங்கள் செய்யப்படும். போக்குவரத்துத் துறையினைப் பெருமளவு விரிவுபடுத்தி மக்களின் சேவையைப் பூர்த்தி செய்வதற்காக தனியார் போக்குவரத்து துறைக்கு கூடியளவு வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

நாணயப் பெறுமதி இறக்கம் என்பது எந்தவொரு நாடும் விரும்பிச் செய்வதில்லை. இலங்கைவேறு வழியில்லாமல் தான் இதனைச் செய்கிறது'' என்ருர் அமைச்சர். (சூ-இ)

## பேச்சுவார்த்தை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் சர்வகட்சி மகாநாட்டில் விவாதிக்கப்படும் என்று குறிப்பிட்ட ஜனதிபதி, தனிநாட்டுக் கொள்கையை தமிழர் விடுதலைக்கூட்டணி கைவிட வேண்டும் இந்திய அரசும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு உறுதியளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சர்வகட்சி மகாநாட்டில் ஆராயப்பட்டு, அங்கு ஏற்றுக் கொள்ளப் படுகிறபட்சத்தில் உத்தேச மாநில சபைத்திட்டம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடக்கும் என்றுங் கூறினுர்.

இந்தத் தலைவர்களை மந்திரி சபைப் பேச்சாளர் திரு. ஆனந்த திஸ்ஸடி அல்விஸ், அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடந்த் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

# பி. பி. ஸி.மீது வழக்கு தொடருவதில்லை என முடிவு

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் நடந்த கலவரங்கள் தொடர்பாக தவருன செய்திகளை பரப்பியதாக பி. பி. சி. ஒலி பரப்பு நிறுவனத்திற்கும் வேறு சில வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கும் எதிராக தொடர முயற்சித்த வழக்கை கைவிடுவதென அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்துள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனைகளைக் கேட்டறிந்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த நாட்டின் பிரஜை அல்லாத ஒருவருக்கு சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர முடியாதென்று சட்டமா அதிபர் தெரிவித்ததினுல் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார். (இசூ)

## இப்படி...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றம் பின்தள்ளப்பட்டுள்ளது. இன்றய நிலையை விட மோசமான பேரழிவுகளிலிருந்து எல்லாம் பல வெளி நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. அதேபோல் நாமும் மீண்டும் தொடர்ந்து முன்னேறுவோம். (சூ)

### 3வது கிரிக்கெட் டெஸ்ட்

## மேற்கிந்திய தீவுகள் இந்தியாவை வென்றது!

(அஹமதாபாத்)

இந்திய, மேற்கிந்திய அணிகளுக்கிடையே அஹமதாபாத்தில் நடைபெற்ற 3வது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்திய அணி எதிர்பாராதவகையில் 138 ஓட்டங்களினுல் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று 4வது நாள் ஆட்டத்தின்போது மேற்கிந்திய அணி தனது 2-வது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 201 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி தனது 2-வது இன்னிங்ஸில் 103 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்ததினுல் மேற்கிந்திய அணி 138 ஓட்டங்களினுல் வெற்றி பெற்றது.

இறுதி ஸ்கோர் விபரம்:

| | |
|---|---|
| மே இ தீவுகள்: | 281, 201 |
| இந்தியா: | 241, 103 |

## பாஸ்போர்ட்டுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீனி, பால், பாற்ப் பொருட்கள் கால்நடை, மீன்பிடி ஆகிய தொழில்களில் ஈடுபடும் தனிப்பட்ட கம்பனிகளுக்கு 5 ஆண்டு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

வெளி நாட்டு அந்நிய நாணய கணக்குகளிலும் வட்டிக்குள்ள வருமான வரி விலக்கு 3 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகளாக அதிகரிக்கப் படடுள்ளது

செல்வவரியும் இதே போல் 3 ஆண்டிலிருந்து [illegible]று ஆண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன லைசன்ஸ் விண்ணப்பக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நில அளவை, மதிப்பீடு கட்டணங்கள் உயர்ந்துள்ளது.

அரசாங்க ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ள வாடகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் மொத்த விற்பனைவரி நான்கரை வீதத்திலிருந்து 1 சத வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### எப்படிச் சமாளிப்பது?

துண்டு விழும் தொகையான 2315 கோடி 96 லட்சம் ரூபாயைச் சமாளிப்பதற்கு பின்வரும் வழிகளிலிருந்து நிதிகள் பெறப்படவுள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

புனர்நிர்மாண வருடாந்த மேல்திக வரிமூலம் — ரூபா 40 கோடி

ஒரு சதவீத மாதச் சம்பளத்தின் வருமானவரி — ரூபா 20 கோடி.

மொத்த விற்பனைவரி—ரூபா 40 கோடி.

புகையிலை வரி-ரூபா 10கோடி

மதுபானத் தீர்வை-9 கோடி

சுங்கத் தீர்வை ரூ. 3 கோடி

தபால் கட்டண அதிகரிப்பு ரூ 13 கோடி.

தொலைதொடர்பு ரூ. 9 கோடி.

பாஸ்போர்ட் ரூ. 4 கோடி.

அரசாங்க வாடகை ரூ. 3 கோடி

வெளிநாட்டு உதவி ரூ. 415 கோடி.

வெளிநாட்டுத் திட்டங்கள், கடன் உதவி ரூ. 816 கோடி 20 லட்சம்.

உள்ளூர் ரூபாய் கடன் 355 கோடி.

வங்கி முறை ரூ. 60 கோடி 10 லட்சம்.

### இலங்கையர் வசதியாக வாழ்கின்றனர்

சில அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை வி[illegible] இலங்கையர்கள் மிகவும் வசதியாக வாழ்கின்ருர்கள் என்று குறிப்பிட்ட நிதி அமைச்சர், அரசாங்கத் திணைக்களங்களில் நடக்கும் வீண்விரயங்களை போக்க பெரும் போராட்டம் ஒன்றை நடாத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்ருர்.

1974ஆம் ஆண்டில் இந்நாட்டில் வேலையில்லாதிருந்த தொகையில் இப்போது பாதித் தொகையே வேலையில்லாதிருப்பதாகவும் திரு. ரொனி கூறினுர்.

இருபத்தொரு ரூபா உழைத்து ஐம்பத்தொரு ரூபாயை செலவுசெய்யவேண்டிய நிலையிலேயே இலங்கை குடும்பங்களின்நிலை இருக்கிறது என்றும் குறிப்பிட்டார் அமைச்சர்.

நேற்றுப் பிற்பகல் 2-10க்கு ஆரம்பித்த தனது உரையை இரவு 7-20 மணிக்கு முடித்தார். தேநீர் இடைவேளைக்கு 30 நிமிட நேரம் எடுக்கப்பட்டது.

## நிதி அமைச்சர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சபைக்கு வரவில்லை.

சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்கா 'நிதியமைச்சர் எங்கே?' என்று கேட்டார். அதனைத் தொடர்ந்து சபையில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது,

இச்சமயம் அத்தனகல்ல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி எழுந்து, 'பட்ஜட் உரை வாசிப்புக்காக சபையின் நிரந்தர விதிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனுல் இங்கே நிதியமைச்சரைக் காணவில்லை. ஆகையால் நாம் அடுத்த நிகழ்ச்சிக்கு செல்வோம்' எனக் கூறிவிட்டு அமருகையில் நிதியமைச்சரும் சபைக்குள் நுழைந்தார். தமது பட்ஜட் உரை அடங்கிய மண்நிறப்பெட்டியுடன் (பச்சை நாடாவினுல் சுற்றப்பட்ட) சரியாக 2 மணி 9 நிமிடத்துக்கு சபைக்கு வந்த நிதியமைச்சர் 2-10மணிக்கு தமது பட்ஜட் உரையை ஆரம்பித்தார்

கிராமிய தொழில்துறை அமைச்சர் எஸ். தொண்டமான், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா, கலவானத்தொகுதி எம். பி. திரு.சரத்முத்தெட்டுவேகம ஆகியோர் நேற்று சபையில் சமுகமளித்திருக்கவில்லை.

பாராளுமன்றத்தைச் சுற்றி பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தைச் சுற்றியுள்ள வாவியிலும் கடற்படையினர் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்தனர். (இ- சூ)

## நிதி [illegible]மைச்சர் அளித்த தேநீர் விருந்து

(கொழும்பு)

நேற்று பாராளுமன்ற தேநீர் இடைவேளையின் போதுநிதிதிட்டமிடல் அமைச்சர் திரு. ரொனிடிமெல் அமைச்சர்கள், பிரமுகர்கள், அவர்களின் பாரியார்கள் பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கு தேநீர் விருந்தளித்து கௌரவித்தார்.

வரவு செலவுத் திட்ட வாசிப்பை அவதானிக்க ராஜதந்திரிகள் பகுதியில் பெருந்தொகையான வெளிநாட்டு பிரமுகர்கள் நிறைந்திருந்தனர் பொதுமக்கள் கலரியில் பார்வையாளர் குறைவாகக் காணப்பட்டனர். (சூ)

## நேற்று இங்கு வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஒய்வூதியம் வண்ணுர்பண்ணை தபால் கந்தோரில் நேற்று வழங்கப் பட்டது. (சூ)

## சைபிரஸில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக அங்கம் வகித்து வருகிறது துருக்கியின் இந்த நடவடிக்கை சைபிரஸின் இறமையைப் பாதிக்கும் ஒரு செயலாகும். சைபிரஸின் ஐக்கியத்தை பாதுகாக்க வேண்டியது உலக நாடுகளின் கடமையாகும் என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (சூ)

## தொலைக்காட்சிப் பெட்டிகள் பற்றி ஆய்வு

(கல்வியங்காடு)

உள்நாட்டமைச்சும்,இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து தொலைக்காட்சிப் பெட்டிச் சொந்தக்காரர் பற்றிய ஆய்வு ஒன்றினை நாட்டின் சகல பாகங்களிலும் நடாத்துகின்றனர்.

இவ்வாய்வு தற்சமயம் யாழ். மாவட்டத்திலும் நடைபெறுகிறது யாழ்ப்பாணப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் தமக்கு கீழ் உள்ள கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஊடாக கிராமம் தோறும் இதனைச் செய்கின்றனர்.

## "விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும்"

(மாவிட்டபுரம்)

தற்சமயம் அறிமுகம் செய்யப்படவிருக்கும் கல்வி வலய திட்டம் கிராமப்புறப்பாடசாலை மாணவர்களிடையே கல்வித் துறையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது''

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தை புனரமைப்புச் செய்யும் விசேட கூட்டத்துக்கு தலைமை வகித்தும் பேசுகையில் கூறினுர்.

இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, [illegible]-ம் இலக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49,Telephone: 22389 —24126.